2013 அக்டோபர் 23] [பேரவைத் தலைவர்]

திரு. ப. குருசாமி அவர்கள் 1977 முதல் 1980 வரையிலும் மற்றும் 1980 முதல் 1984 வரையிலும் இரண்டு முறை அந்தியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் பணியாற்றினார்கள்.

திரு. கு. பாலகிருட்டினன் அவர்கள் 1971 முதல் 1976 வரை மன்னார்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. கே. சின்னசாமி அவர்கள் 1989 முதல் 1991 வரையிலும் மற்றும் 1991 முதல் 1996 வரையிலும் இரண்டு முறை சேந்தமங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. கே.ஆர். கணபதி அவர்கள் 1980 முதல் 1984 வரையிலும் மற்றும் 1985 முதல் 1988 வரையிலும் இரண்டு முறை சிதம்பரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

முற்பகல் 10-05

2. இரங்கல் தீர்மானம்

உறுப்பினர் திரு. செ. பெருமாள் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கல் தீர்மானம்.*

"சேலம் மாவட்டம் ஏற்காடு தொகுதியிலிருந்து 1989 முதல் 1991 வரையிலும், 1991 முதல் 1996 வரையிலும் மற்றும் 2011 ஆகிய

ஆண்டுகளில் மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புடனும் திறம்படவும் பணியாற்றியவரும், இனிய பண்பினையும், எளிமையையும், அடக்கத்தையும் தன்னகத்தே கொண்டவரும், பல ஆண்டுகளாக பொது வாழ்வில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு மக்களுக்காக பணியாற்றியவரும், தான் சார்ந்த அரசியல் கட்சியின்மீதும், கட்சித் தலைமையின்மீதும் அன்பும், பாசமும், ஆழ்ந்த நம்பிக்கையும், அளப்பரிய விசுவாசமும், மாறாப் பற்றும் கொண்டவரும், அனைத்துத் தரப்பினரிடத்திலும் கட்சிப் பாகுபாடின்றி அன்பாகவும், பண்பாகவும் பழகி அனைவரின் நன்மதிப்பையும், அன்பையும் பாராட்டுதலையும் பெற்று, துடிப்புமிக்க செயல் வீரராக பணியாற்றி வந்த திரு. செ. பெருமாள் அவர்கள் 18-7-2013 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தானும், மறைந்த உறுப்பினருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (24-10-2013) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

* * *